ரங்கா ரங்கா

rangA rangA

This poem is about lord SrI ranganAtha, who is in lying posture at SrIrangam divyadESam

1. அனைத்தும் அரங்கனே

**உந்தியில் படைத்தாய் ரங்கா ரங்கா * உலகம் உண்டாய் ரங்கா ரங்கா *
அந்தியில் அழித்தாய் ரங்கா ரங்கா * அவனி அளந்தாய் ரங்கா ரங்கா *
மந்திர மேடையில் ரங்கா ரங்கா * மாயமே செய்தாய் ரங்கா ரங்கா *
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா * திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா.**

anaittum aranganE

undiyil paDaittAi rangA rangA * ulagam uNDAi rangA rangA *
andiyil azhittAi rangA rangA * avani aLandAi rangA rangA*
mandira mEDaiyil rangA rangA * mAyamE seydAi rangA rangA *
tiruvaDi aDaindEn rangA rangA * tiruvaruL peRREn rangA rangA.

2. திருவரங்கமும் பரமபதமும்

**வான்நதி விரஜா ரங்கா ரங்கா * தேனாறு காவிரி ரங்கா ரங்கா *
ஓண்மதி அமரர் ரங்கா ரங்கா * ஓரெழுத்து விமானம் ரங்கா ரங்கா *
விண்ணில் மறை ரங்கா ரங்கா * மண்ணில் இறை ரங்கா ரங்கா *
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா * திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா.**

tiruvarangamum paramapadamum

vAn nadi virajA rangA rangA * tEnARu kAviri rangA rangA *
oNmadi amarar rangA rangA * Orezhuttu vimAnam rangA rangA *
viNNil maRai rangA rangA * maNNil iRai rangA rangA *
tiruvaDi aDaindEn rangA rangA * tiruvaRuL peRREn rangA rangA.

3. திருவரங்க ஸ்தலம்

காவிரி கிடப்பாய் ரங்கா ரங்கா * பாய்விரித்த நாகம் ரங்கா ரங்கா *
சுற்றேழு நடுவே ரங்கா ரங்கா * சுகமாய் உறங்கிட ரங்கா ரங்கா *
மணத்தூண் உள்ளே ரங்கா ரங்கா * மனத்தின் உள்ளும் ரங்கா ரங்கா *
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா * திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா.

tiruvaranga sthalam

kAviri kiDappAi rangA rangA * pAiviritta nAgam rangA rangA *
cuRREzhu naDuvE rangA rangA * sugamAi uRangiDa rangA rangA *
maNattUN uLLE rangA rangA * manattin uLLum rangA rangA *
tiruvaDi aDaindEn rangA rangA * tiruvaruL peRREn rangA rangA.

4. பெரிய பெருமாள் திருக்கோலம்

படுக்கை அரவணை ரங்கா ரங்கா * வலக்கை தலையணை ரங்கா ரங்கா *
இடக்கை திருவடி ரங்கா ரங்கா * இலக்கென காட்டிட ரங்கா ரங்கா *
தென்திசை எதிரே ரங்கா ரங்கா * திவம் இங்கிதுவே ரங்கா ரங்கா *
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா * திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா.

periya perumAL tirukkOlam

paDukkai aravaNai rangA rangA * valakkai talaiyaNai rangA rangA *
iDakkai tiruvaDi rangA rangA * ilakkena kATTiDa rangA rangA *
ten disai edirE rangA rangA * tivam ingiduvE rangA rangA *
tiruvaDi aDaindEn rangA rangA * tiruvaruL peRREn rangA rangA.

5. பெரிய பெருமாள் பெருமை

இந்திரர் இறைவா ரங்கா ரங்கா * மந்திர மணமே ரங்கா ரங்கா *
அந்தமில் ஆதியே ரங்கா ரங்கா * சுந்தரச் சோதியே ரங்கா ரங்கா *
வந்தவர் வினைகெட ரங்கா ரங்கா * செந்நிற புன்னகை ரங்கா ரங்கா *
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா * திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா

periya perumAL perumai

indirar iRaivA rangA rangA * mandira maNamE rangA rangA *
andamil AdiyE rangA rangA * sundarac cOdiyE rangA rangA *
vandavar vinai keDa rangA rangA * cenniRa punnagai rangA rangA *
tiruvaDi aDaindEn rangA rangA * tiruvaruL peRREn rangA rangA.

6. திருவரங்க அடியவர்கள்

**ஆழ்வார் அனைவரும் ரங்கா ரங்கா * அலற்றும் அமலா ரங்கா ரங்கா *
தாழ்வாய் நிற்பார் ரங்கா ரங்கா * திருவடி தப்பார் ரங்கா ரங்கா *
வாழ்வார் மகிழ்ந்து ரங்கா ரங்கா * வைகுந்தம் இகழ்ந்து ரங்கா ரங்கா *
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா * திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா.**

tiruvaranga aDiyavargaL

AzhvAr anaivarum rangA rangA * alaRRum amalA rangA rangA *
tAzhvAi niRpAr rangA rangA * tiruvaDi tappAr rangA rangA *
vAzhvAr magizhndu rangA rangA * vaikuntam igazhndu rangA rangA *
tiruvaDi aDaindEn rangA rangA * tiruvaruL peRREn rangA rangA.

7. அடைக்கலம்

**சரணம் ஒன்ற ரங்கா ரங்கா * மரணம் ஒன்றே ரங்கா ரங்கா *
தரணி கடத்த ரங்கா ரங்கா * தனிமை கண்டேன் ரங்கா ரங்கா *
அரணாம் விளிக்க ரங்கா ரங்கா * அபயம் அளிப்பாய் ரங்கா ரங்கா *
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா * திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா**

aDaikkalam

caraNam onRa rangA rangA * maraNam onRE rangA rangA *
taraNi kaDatta rangA rangA * tanimai kaNDEn rangA rangA *
araNAm viLikka rangA rangA * abayam aLippAi rangA rangA *
tiruvaDi aDaindEn rangA rangA* tiruvaruL peRREn rangA rangA.

8. முடிவுரை

**திருக்கோயில் இதுவே ரங்கா ரங்கா * திருத்தலம் எல்லாம் ரங்கா ரங்கா *
இருநாலு எழுத்தும் ரங்கா ரங்கா * பெருவான் இழுக்கும் ரங்கா ரங்கா *
திருமலை அப்பா ரங்கா ரங்கா * பெருங்குல நிதியே ரங்கா ரங்கா *
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா * திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா.**

muDivurai

tirukkOyil iduvE rangA rangA * tiruttalam ellAm rangA rangA *
irunAlu ezhuttum rangA rangA * peruvAn izhukkum rangA rangA *
tirumalai appA rangA rangA * perunkula nidhiyE rangA rangA *
tiruvaDi aDaindEn rangA rangA* tiruvaruL peRREn rangA rangA

(aDiyEn thank Smt. Kalyani Krishnamachari for the help in English transliteration)